# மிருதங்க அரங்கேற்றம்

ஈழத்தில் இன்று இசைத்துறையைப் பொறுத்தவரையில் நல்ல ஆரோக்யமான சூழ்நிலையொன்று உருவாகியிருக்கிறது. இப்பொழுதெல்லாம் அடிக்கடி கலை அரங்கேற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன அந்த வரிசையில் கடந்த கிழமை நடைபெற்ற சோமசுந்தரம் தம்பதிகளின் புதல்வன் செல்வன் நிரஞ்சன் நந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் யாழ் றிம்மர் மண்டபத்தில் இடம்பெற்றது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. பா. சின்னராசா அவர்கள் அரங்கேற்றிய பத்தாவது மிருதங்க மாணவன் இவராவர்.

செல்வன். நந்தகோபனின் அரங்கேற்றத்துக்குத் துணையாக சட்டத்தரணி திரு. டபிளியூ. எஸ். செந்தில்நாதன் அனுசரணையாகப் பாடினார்கள். ப்ரணவப் பொருளே என்னும் ஹம்ஸத்வனி இராகத்தில் மிஸ்ரசாபு தாளத்தில் அமைந்த உருப்படியுடன் அரங்கேற்றம் ஆரம்பமானது.

நீண்டநேரக் கச்சேரிகள் வர்ணத்துடன் ஆரம்பமாவது வழக்கம். அதற்கு ஈடுகொடுக்கத்தக்கதாக மிருதங்கக் கச்சேரி மிஸ்ரசாபு தாளத்தில் அமைந்த உருப்படியுடன் ஆரம்பமானது மிகப்பொருத்தமாக இருந்தது.

செல்வன். நிரஞ்சன் மத்திம காலத்தில் கற்பனாஸ்வரம் பாடியபோதும், காலப் பிரமாணம் தவறாது அனுசரணையாக வாசித்தமை அவருக்கு மிருதங்கக் கலை காலசுதியில் கைவரும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

வரந்தருவாய் என்னும் கல்யாணி ராகத்தில் அமைந்த உருப்படிக்கு பாடகர் செய்த ஸ்வரக் குறைப்பும் மகுடமும் பின்னர் மிருதங்கத்தில் பொருத்தமுற வண்ணம் செல்வன் நிரஞ்சன் வாசித்த நீண்ட தனி ஆவர்த்தன விந்நியாசம், கற்பனைகளையும், நடைமாற்றங்களையும் கொண்டு கச்சேரிக்குச் சிகரம்வைத்தாற் போல் அமைந்தது.

பிரதானமாக எடுத்துக் கொண்ட திஸ்ர திரிபுடை தாளத்தில் அமைந்த பல்லவி மிருதங்க அரங்கேற்றத்திற்கு பொருத்தமான தாளச்சொற்கட்டுக்களைக்களைக் கொண்டு விளங்கியது. இவை தவிர ஏனைய இலகு பாடல்களுக்கும் இவரின் வாசிப்பு திருப்திகரமாக அமைந்தது.

இன்று பல்துறையில் உள்ளவர்களும் இசையை நேசித்து வளர்க்கிறார்கள் என்பதற்கு சட்டத்தரணி அவர்களின் பாட்டு ஒரு எடுத்துக்காட்டாகும்.

அனுசரணையாகவும் நாத சுத்தமாகவும் லய சுத்தமாகவும் மிருதங்கம் வாசிப்பதற்கு சட்டத்தரணி அவர்களின் பாட்டும், இவற்றிற்கு மேலாக திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி அவர்களின் வயலினும் அமைந்தன. அரங்கேற்றம் முழுவதையும் சிறப்பாக வழிநடத்திய வயலின் பாராட்டுக்குரியது செல்வன் க. வேணிலானின் கெஞ்சிராவும், செல்வன். இ. யோகராசாவின் கடமும் மிருதங்கத்துக்கும் பாட்டுக்கும் அனுசரணையாக அமைந்தன.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அரங்கேற்றங்களில் பெருபாலும் நான் காணுகின்ற பெருங்குறை என்னவென்றால் பாராட்டிப் பேசுகின்றவர்கள் பக்கவாத்தியகாரரை மறந்துவிடுகிறார்கள்.

இன்னொரு குறை என்னவென்றால் ஒலிபெருக்கி அமைப்பவர்கள் தமது கடமையை உணர்ந்து செய்வதில்லை. ஆரம்பத்திலே ஒலிபெருக்கி இரண்டொரு பாடல்களின்போது இடஞ்சல் செய்ததைச் சுட்டித்தான் காட்டவேண்டும்.

காரை செ. சுந்தரம்பிள்ளை.

ஈழநாடு 02-10-82

# லண்டன் கண்காட்சியில் 'சங்கிலியம்' காவியம்

## காரை சுந்தரம்பிள்ளையின் 'ஈழநாடு' வெளியீட்டுக்கு கௌரவம்

(கொழும்பு)

இலங்கையில வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கியதன் 50-வது ஆண்டு தினத்தையொட்டி லண்டன் பொதுநல அமைப்பு திருவனத்தில் இலங்கை அரசினால் நடாத்தப்படும் கண்காட்சியில் "ஈழநாடு" வெளியீடுகளில் ஒன்றான கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய "சங்கிலியம்" நாவலும் வைக்கப்படவுள்ளது.

இவ்வாண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 1-ம் திகதி வரை நடைபெறும் இக்கண்காட்சியைப் பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத் ஆரம்பித்து வைக்கிறார்.

இக்கண்காட்சியின் விசேட அம்சமான 'இலங்கை நூலகப் பிரிவில்' வைப்பதற்கு 'சங்கிலியம்' நூலின் ஒரு பிரதியைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு பிரதமரின் செயலாளர் திரு பிராட்மன் வீரக்கோன் திரு சுந்தரம்பிள்ளையைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

1970 ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'சங்கிலியம்' காவியம் 69-ம் ஆண்டு 'ஈழநாடு' 10வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற இலக்கியப் போட்டியின் அங்கமான காவியப் போட்டியில் முதலாவது இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ)

# காரை சுந்தரம்பிள்ளைக்கு யாழ். மேயர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண இராச்சியமாக—இராசதானியாக அன்று அறியப்பட்ட தமிழீழத்தின் கடைசி மன்னனான சங்கிலி மன்னன் கதையை கவிதை நாடகமாக எழுதித்தந்தவர் கவிஞர் காரை சுந்தரம் பிள்ளை. 'ஈழநாடு' பத்திரிகையால்முதற்பரிசுவழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டவர். ஸ்ரீலங்கா அரசின் சாகித்தியப் பரிசும்கவிஞரின்இவ்வரலாற்று நாடகத்துக்குக் கிடைத்தது."

மேற்கண்டவாறு யாழ். மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் யாழ்ப்பாண மாநகராட்சிமன்றத்தின் கீதத்தை ஆக்கித்தந்த கவிஞர்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

யாழ். மாநகராட்சிமன்றத்தின் கீதத்தை ஆக்கித்தந்த கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையைக் கௌரவிப்பதில் இச்சபையும் நாமும் பெருமை கொள்கிறோம்.

இக்கவிஞர் கவிதைப் போட்டிகளில் பல தங்கப்பதக்கங்களைப் பெற்றவர். 1967, 1970ம் ஆண்டுகளில் சாகித்தியமண்டலப் பரிசுகளைப் பெற்றவர் என்றார்.

ஈழநாடு

19 -12- 69

# சங்கிலியம் காட்டும் பண்டைய ஈழம்

— விமலா —

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய 'சங்கிலியம்' என்ற காவியம் ஈழவள நாட்டின் இயல்பை பாடலாகப் புனைந்த ஓர் இலக்கியக் காவியமாக விளங்குகிறது. கடவுள் வாழ்த்துக்கள் கூறி காப்பியத்துக்குரிய அவையடக்கம் கூறியபின் ஈழநாட்டுச் சிறப்பை எடுத்தியம்புகிறார்.

இது ஈழநாட்டின் வரலாற்றைப் பின்னணியாக வைத்துப் பாடப்பெற்றது கவனுறத்தக்கது. 'சிங்கள தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' எனச் செந்தமிழரடு சிங்களவரையும் ஒருமுகப்படுத்திக் காண விரும்பிய பாரதியின் கூற்றை நனவாக்குவது போல்' செந்தமிழ் மக்களோடு சிங்களவர் வாழும் நாடு' இந் நாடு எனப்பாடியுள்ளார் நம் கவிஞர்.

ஒரு நாட்டுக்கு அழகைக் கொடுப்பது ஆறுகள். 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்றார் ஔவைப்பிராட்டி. மாணிக்க கங்கையும், கழனியும், மகாவலிகங்கையும் ஈழ நாட்டை அழகுறச் செய்வதைக் கண்ட கவிஞர், ''மாணிக்க கங்கை அணி செய்கின்ற நாடு'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

கைலாசமலையைக் கையாலெடுத்த பத்துத்தலை இராவணன் அரசாண்ட நாடு இந்த இலங்கை. எல்லாளன் ஆட்சிசெய்த நாடு இது. ஒப்பற்ற ஓவியங்கள் கொண்ட சிகிரியாக்குன்றையுடையது இந்நாடு. இராமர் சீதையை மீட்பதற்காக இலங்கையில் காலவைத்தார். அவர் காலடி பட்டதனால் புனிதமடைந்தது இந்த ஈழம் பெருமை மிகு கிரிமலையையுடையது இந் நாடு புத்த மதமும், சைவசமயமும், பொலிகின்ற இணையற்ற நாடு இது இவ்வரலாற்றையெல்லாம் வைத்து அழகுற தம் கவித்திறத்தால் பாடியுள்ளார் நம் கவிஞர்

கதிர்காமம், கோணேஸ்வரம், திருககேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம் ஆகிய புனிதஸ்தலங்களைக் கொண்டுள்ளது இந்நாடு அதனால் ''சிவவண்ணமும் திருவண்ணமும் ஒருங்கே திகழ்கின்ற நாடு '' என்பதைக் கவிஞர் எமக்குக் காட்டத் தவறவில்லை

சமயகுரவர்களாகிய சம்பந்தரும், சுந்தரரும், தமிழகத்திலிருந்து ஈழம் வந்து இந்த ஸ்தலங்களைத் தரிசித்ததுமல்லாமல் கோணேஸ்வரரைப் பற்றியும், கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பற்றியும் பதிகங்கள் பாடியுள்ளார்கள் அவர்கள் தங்கள் திருப்பதிகங்களில் ஆலயத்தைச் சூழ்ந்திருக்கும் சோலையின் அழகையும், கடலின் சிறப்பையும், ஒவ்வொரு பாடலிலும் வர்ணித்துள்ளார்கள் அவர்கள் எப்படிப் பூஞ்சோலையினதும், கடலினதும் அழகைத் தீந்தமிழால் கவிதை தீட்டினார்களோ அதேபோல் இக்காவக் கவிஞராகிய 'சங்கிலியம்' ஆசிரியரும் ஈழநாட்டின் அழகிய பூஞ்சோலையை நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

''காவெல்லாம் இனிய [illegible]கள், கன்னலும்ஈழின் [illegible]கள், பூவெலாம் செந்தேன் வேர்வை, புனலெலாம் மலரின போர்வை, நாவெலாம் பக்திப்பாடல், நாடெலாம் குரவைகும்மி, ஆவெலாம் காமதேனு. ஆறெலாம் மணியும் முத்தும்''

அடுத்து யாழ்ப்பாணத்துச் சிறப்பைக் கூறுகிறார். யாழ்ப்பாணம் என்பதன் பெயர்க்காரணம் கூறப்படுகிறது. அதையடுத்து யாழ்ப்பாணத்தின் செல்வச்செழிப்பைக் கூறுகிறார் மண்ணெங்கும் பச்சைப் பயிர்வகை; மனை எங்கும் தாலியக் கும்பல்; விண்ணெங்கும் வாசப் புகைத்திரள்; வீதியெங்கும் சந்தனச்சேறு; தண்ணீரெல்லாம் அல்லியும் ஆம்பலும்; சத்திரங்களில் அன்னக் குவியல்கள்.

யாழ்ப்பாணத்திலே நானாவித ஒலிகள் கேட்கின்றன. அவற்றையெல்லாம் பிரித்துக் கூறுகிறார் கவிஞர். சோலைகளிலே குயில்கள், புறாக்கள், கிளிகள் ஆகியவற்றின் சந்தோஷ ஆரவார ஒலிகள் கேட்கின்றன. ஆலயங்களிலே வேதமந்திரங்களும், பூசைமணி ஓசையும் நால்வரது தேவார திருவாசகங்கள் ஓதும் ஒலியும் கேட்கின்றன. அரங்கங்களில் பரத நாட்டியஒலிகளும் கவிதை கருத்தரங்கு ஆகிய ஒலிகளும்கேட்கின்றன இதைவிட ''விருந்து செய்பவர் வீட்டின் ஒலிகளும் வெற்றி வீரர்கள் செய்யும் ஒலிக

யாழ்ப்பாணத் திலுள்ள துறைமுகங்களை வரிசைப்படுத்தித் தருகிறார் கவிஞர். காங்கேசன் துறை, கொழும்புத்துறை ஊர்காவற்றுறை, பண்ணைத்துறை பருத்தித்துறை இவையெல்லாம் முத்தொடு சங்குவேறு பண்டங்களும் கப்பலில் கொணர்ந்து நம்நாட்டை செழிப்புறச் செய்வதை நிறுவு படுத்துகிறார். இவ்வளவு பெருமை வாய்ந்த யாழ்ப்பாணத்தின் சிறப்பை.

''மாகடல் தரும் செல்வ வளத்தினால், மண்வளத்தினால் மக்கள் வலியினால், ஏகமாக இயங்கும் எழிலுறும், ஏற்றம் மிக்க நாடிப் பதியாகுமே''

என்றுகூறி இதற்கு மகுடமாக விளங்கும் நல்லூர் பதியின் பெருமையையும் சிறப்பையும்எடுத்துக்காட்டுகிறார்.

வேதியர் ஒழுக்கம் மிக்கார், வினைஞர்கள் தொழிலின் மிக்கார், காதலர் பண்பின் மிக்கார், கற்றவர் அறிவின் மிக்கார், போதகர் செயலின் மிக்கார், புலவர்கள் கவியின் மிக்கார், மாதரார் மாண்பின் மிக்கார், மற்றுளோர் அன்பின் மிக்கார்.

இவ்வளவு சிறப்புக் கொண்டதனாற் போலும் நல்லூர் என்ற பெயரைப் பெற்றது. ஈழநாடும். யாழ்ப்பாணமும், நல்லூரும் இவ்வளவு செல்வ வளங்களைப் பெற்றிருப்பதைக் காணக் கவிஞரிடம் நிறைந்த சொல்வளம் இருந்தமையால்எம்போன்ற ரசிகர்களுக்குப் படைத்தளித்தார் இக்காவியத்தை என் பாதநாம் என்றும் மறக்கவோ மறைக்கவோமுடியாது

ஈ.நாடு 19-12-69

# பாராட்டுப் பெற்ற —கவிஞர்

யாழ் மாநகர மன்றக் கீதத்தை ஆக்கி முதற்பரிசை பெற்ற கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை நேற்று யாழ். மாநகரசபையால் பாராட்டப்பட்டார்.

ஈழத்து சிறந்த கவிஞர்களுள் ஒருவரான இவர் 'ஈழநாடு' நடத்திய அகில இலங்கை ரீதியிலான காவியப்போட்டியில் தனது 'சங்கிலியம்' என்னும் காவியத்துக்கு முதற்பரிசைப் பெற்றவர். மிக இளம் வயதிலேயே இரண்டு தடவைகள் சாகித்திய மண்டலப் பரிசை 'தேனாறு' 'சங்கிலியம்' ஆகிய நூல்களுக்கு பெற்றவர். 'சங்கிலியம்' 'ஈழநாடு' வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கது. இந் நூல் லண்டனில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் இடம் பெற்றது.

பல ஆண்டுகள் யாழ். இலக்கிய வட்டச் செயலாளராக விருந்து, பல நூல்களை வெளியிட்டவர். விழாக்களை நடாத்தியவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் இசை, நாடகம், விமர்சனம் ஆகிய துறைகளிலும் ஆ.மான பாண்டித்தியமுடைய இவர், தமது பட்டப் பின்படிப்புக்குச் சமர்ப்பித்த ஈழத்து இசை நாடக வரலாறு என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை பலரின் பாராட்டுதலைப் பெற்றது. கல்வித்துறையில் பட்டங்கள் பெற்றவா. காரைநகரை பிறப்பிடமாக கொண்ட இவர் லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியும், இலங்கைப்பல்கலைக்கழக கல்வித்[?]றைப் பட்டங்களும் பெற்றவர்.

காரைநகர் இந்துக் கல்லூரி அதிபராக இருந்தவர். தற்பொழுது பலாலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

ஈழநாடு
11-02-82

# இசைக்கச்சேரி

கடந்த கிழமை திருநெல்வேலியிலுள்ள ஈவ்லின் இரத்தினம் இன்ரிரியூற்றில் சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரனுடைய இசைக்கச்சேரி நடைபெற்றது. இங்கு நடைபெற்ற இரண்டாவது கச்சேரி இதுவாகும்.

இவருடையகச்சேரி 'நின்னே பஜன' என்னும் நாட்டை இராக உருப்படியுடன் ஆரம்பமானது. ஆரம்பத்திலேயே கச்சேரி களைகட்டத்தொடங்கியது. இரண்டாவதாகப்பாடப்பட்ட 'கானரசம்' என்னும் வேகட இராகக்கிருதி கச்சேரிக்கு ரசனையூட்டியது. அடுத்ததாக இவர் எடுத்துக்கொண்ட 'சுப்ரமண்யேன' என்னும் சுத்தன்னியாசி இராகக்கிருதியை, நன்றாக இராக ஆலாபனை செய்து பாடினார். நீண்டஆலாபனை செய்து பாடப்பட்ட இக்கிருதிக்கு ஸ்வரம் பாடாமல் விட்டமை ஒரு குறையாகத் தோன்றியது. லதாங்கி இராக ஆலாபனையும் அதில் பாடப்பட்ட கிருதியும் இக்கச்சேரிக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்தது.

இவற்றையடுத்துப் பாடப்பட்ட மீராபஜன், இராசமாலிகா கிருதி, தில்லானா யாவும் சிறப்பாகவே அமைந்தன. பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களைப் பாடியமை குறிப்பிடத்தக்கது.

'மொத்தத்தில் கச்சேரியின் சிறப்புக்குக் காரணம் கற்பனா ஸ்வரம்பாடிய லாவகமும்ஸ்வரக்குறைப்பும் மூத்தாய்பாக வைத்தமகுடமுமேயாகும்.

மேற்படி நிகழ்ச்சிக்கு சங்கீத வித்துவான் திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி வயலினும், சங்கீத வித்துவான் என், சோமஸ்கந்தசர்மா மிருதங்கமும், சங்கீத ரத்தினம் எம். சிதம்பரநாதன் கெஞ்சிராவும் வாசித்தனர்.

இயற்கையாகவே அனுசரயுடன் வயலின் வாசிக்கும் திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணியவர்கள் இன்றும் மிகவும் அனுசரனையுடன் வாசித்தார்கள்.

திரு. என். சோமாஸ்கந்தசர்மாவின் மிருதங்க வாசிப்பில் லயப்பிடிப்பும் இனிமையான நாதமும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மிருதங்கவித்துவானாகிய திரு. எம். சிதம்பரநாதன் இக்கச்சேரியில் கெஞ்சிராவாசித்து கச்சேரியை மேலும் சிறப்பபடைய வைத்தார்.

முழுமையாக அன்றைய கச்சேரி செவிக்கு நல்ல விருந்தாக அமைந்தது.

காரை. செ. சுந்தரம்பிள்ளை

ஈழநாடு,
~~[illegible]~~
1982